# தி.மு.க. இலக்கிய அணி

## சென்னை மேற்கு மாவட்ட பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு !

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **சென்னை மேற்கு** மாவட்டத்திற்குட் பட்ட தி.மு.க. இலக்கிய அணியின் பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## சென்னை மேற்கு மாவட்டம்

### அண்ணா நகர் வடக்கு பகுதி

தலைவர் - ஆர். சரவணன் எண்.9/8, செங்கல்வராயன் தெரு, சௌனாய் நகர், சென்னை-600 030.

துணைத் தலைவர் - பி. சிவகுமார் எண்.267, உத்தனாட்சி அம்மன் கோவில் தெரு, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை-600 106.

புரவலர் - எம். சாமுவேல் எண்.140, முதல் தெரு, பாரதிபுரம், சௌனாய்நகர், சென்னை-600 030.

அமைப்பாளர் - வி. வெங்கடேசன் எண்.269.1, 14வது தெரு, என்.எஸ்.கே. நகர், அரும்பாக்கம், சென்னை-600 029

துணை அமைப்பாளர்கள் - 1) பி. கணேசன் எண்.340, 10வது தெரு, டி.பி. சத்திரம், சென்னை-600 010. 2) முரளி 38/10, ஆர்.வி.நகர் 5வது தெரு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600 102 3) எஸ். இளஞ்செழியன் 53, திருவீதி அம்மன் கோயில் தெரு, அமைந்தகரை, சென்னை-600 029. 4) பி. பிரவின்குமார் எண்.34பி, திருவீதியம்மன் கோயில் 2வது தெரு, அமைந்தகரை, சென்னை-600 029. 5) ஆர். ராஜா எண்.113, கே.வி.என்.புரம் 2வது தெரு, கீழ்பாக்கம், சென்னை-600 010

### அண்ணாநகர் தெற்கு பகுதி

தலைவர் - மீரர் எஸ். பாண்டியன் எண்.15/ஏ, 'சி' பிளாக், எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், சென்னை-600 106.

துணைத் தலைவர் - நாகூர் மீரான் எண்.85, ஆசாத் நகர் 1வது தெரு, அமைந்தகரை, சென்னை-600 029.

புரவலர் - சையத் தமிமுல் அன்சாரி க்யூ - பிளாக், எண்.118, திருக்குறள் தெரு, அரும்பாக்கம், எம்.எம்.டி.ஏ. காலனி, சென்னை-600 106.

அமைப்பாளர் - எஸ். பழனி எண்.28, பாரதியார் 2வது தெரு, சூளைமேடு, சென்னை-600 094.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. தயாளன் வத்தலகுண்டு ஆறுமுகம் நகர், அரும்பாக்கம், சென்னை-600 106. 2) கே. சங்கர் எண்.50/28, விநாயகபுரம் 2வது தெரு, அரும்பாக்கம், சென்னை-600 106. 3) ஜி.வி. சிவக்குமார் எண்.22, ஜே.டி.துரைராஜ் நகர் 6வது தெரு, அமைந்தகரை, சென்னை-600 029. 4) பி. ரதிகுமார் எண்.4/21, கம்பர் தெரு, மேத்தா நகர், அமைந்தகரை, சென்னை-600 029. 5) எம்.கே. வேலாயுதம் எண்.32, லோகநாதன் நகர் 2வது தெரு, சூளைமேடு, சென்னை-29 6) ஆ. கணேஷ் 61/2, படவட்டம்மன் கோவில் தெரு, அரும்பாக்கம், சென்னை - 600106.

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

தலைவர் - பி.கே. ஆசைதம்பி எண்.15/2, அஜிஸ் முல்க் 2வது தெரு, ஆயிரம்விளக்கு, சென்னை-600 006.

துணைத் தலைவர் - எஸ். குமார் எண்.12/48, மேற்கு மாட வீதி, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

புரவலர் - இரா. செந்தில் எண்.56, சாரங்கபாணி தெரு, தி.நகர், சென்னை-600 017.

அமைப்பாளர் - சி. மூர்த்தி எண்.12/81, வரதராஜபுரம், தேனாம்பேட்டை, சென்னை-600 018.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.டி. முருகன் எண்.14/7, தெற்கு போக் சாலை, தி.நகர், சென்னை-600 018. 2) எஸ். ஆடலரசு (எ) நடராஜன் எண்.48, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014. 3) எம். பார்த்திபன் எண்.12/5, எம்.கே.ராதா நகர், தேனாம்பேட்டை, சென்னை-600 006. 4) பி. மதுரை வீரன் எண்.30, சீரணிபுரம் மெயின் ரோடு, தி.நகர், சென்னை-600 017. 5) கே. ராஜேந்திரன் எண்.4/5, பார்த்தசாரதிபுரம், தி.நகர், சென்னை-600 017. 6) ஏ. அமுதவாணன் எண்.19, பிள்ளையார் கோவில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600 018. 7) எஸ். சரவணன் எண்.21, பிள்ளையார் கோவில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600 018. 8) எஸ். கவியரசு எண்.25, சக்கரபாணி தெரு, ஜி.ஆர். டேங்க், தி.நகர், சென்னை-17 9) ஆர். ராஜேந்திரன் எண்.11, கோடம்பாக்கம் ரோடு, கங்கைகரைபுரம், தி.நகர், சென்னை-17 10) சதாசிவம் எண்.17, பி பிளாக், சுதந்திரா நகர், மூர்ஸ் சாலை, ஆயிரம்விளக்கு, சென்னை-6. 11) ஆர்.சிவக்குமார் 13/27, ராமசாமி தெரு, மக்கீஸ் கார்டன், கிரீம்ஸ் ரோடு, சென்னை - 6.

### ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி

தலைவர் - முகவை நடராஜன் எண்.21/9, சக்தி நகர் 3வது தெரு, சூளைமேடு, சென்னை-600 094.

துணைத் தலைவர் - எஸ். நாகூர் மீரான் எண்.102/2, புது திருவள்ளுவர்புரம் முதல் தெரு, சூளைமேடு, சென்னை-600 094.

புரவலர் - பு. மோகன் எண்.5, காமராஜபுரம் முதல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 094.

அமைப்பாளர் - பால சேஷாத்திரி எண்.32/71, காமராஜபுரம் 2வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. மணிகண்டன் எண்.35/12, அபித் நகர், சூளைமேடு, சென்னை-600 094. 2) கே. கணபதி எண்.267, வள்ளுவர் கோட்டம் ஹைரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-34. 3) ஆர்.கே. லட்சுமிபதி எண்.2/46, புஷ்பா நகர், நுங்கம்பாக்கம், சென்னை-600 034. 4) ஜி. சுந்தர் எண்.17/9, காமராஜபுரம் முதல் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034. 5) கே. தணிகைவேல் எண்.15/7, புலியூர் முதல் சந்து, கோடம்பாக்கம், சென்னை-600 024.

### சேப்பாக்கம் பகுதி

தலைவர் - லியாகத் பாஷா எண்.27/12, லால் முகமது குறுக்கு தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.

துணைத் தலைவர் - என். கார்த்திக் எண்.4, கரீம் மொய்தீன் 2வது சந்து, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

புரவலர் - கே. நரேஷ் எண்.73/37, மேற்கு கூவம் ஆறு சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

அமைப்பாளர் - அ. வேதா உதயசூரியன் 2/33, அபிபுல்லா குறுக்குத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். குணசேகரன் 27, அபிபுல்லா குறுக்குத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 2) எஸ். கணபதி எண்.119, எல்ஜிஎன் சாலை, அண்ணா சாலை, சென்னை-2. 3) ஆர். கணபதி எண்.54/44, மேயர் சிட்டிபாபு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 4) எஸ். சதீஷ் குமார் எண்.18/16, முகமது உசேன் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014. 5) எஸ். ராஜ்குமார் எண்.4/7, அசூதின் கான் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

### திருவல்லிக்கேணி பகுதி

தலைவர் - இரா. சௌந்தரபாண்டியன் 2, கற்பக கன்னியம்மன் கோயில் குறுக்கு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

துணைத் தலைவர் - ரா. சரவணன் 30, முத்தையா தோட்டம், 2வது தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.

புரவலர் - இரா. இராஜசேகரன் எண்.08/13, சுப்பிரமணிய தோட்ட தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

அமைப்பாளர் - ரா. ரஞ்சித்குமார் எண்.12/9, முஸ்தாரா பேகம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-600 014.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. நந்தகுமார் 16/21, அறிஞர் அண்ணா தெரு, டாக்டர் அம்பேத்கர் நகர், இராயப்பேட்டை, சென்னை-5 2) கே. கோபிநாத் எண்.58, சூரப்ப தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. 3) மா. விஜயன் எண்.38/79, இருசப்ப தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-08-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

---

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 163வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஆக.2- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 163 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (01.08.2025), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) 94அ வட்டம், பாலியம்மன் கோயில் தெரு, வில்லிவாக்கம். 2) 94வது வட்டம், சிட்கோ நகர்,4வது பிரதான சாலை, வில்லிவாக்கம் சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி.டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமாசங்கர், சொ.முரு கேசன், ப.லோகுபாபு, கே.எஸ்.பாபு எ.வேதா, சீ.வீக்னேஷ், ச.மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

சென்னை - தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில்

# 2வது சர்வதேச மீள் உருவாக்க மருத்துவ மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கிவைத்து சிறப்புரை!

சென்னை, ஆக.2- "சர்வதேச மீள் உருவாக்க மருத்துவ மாநாடு (ReGen 2025)" தொடங்கி வைத்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் இம்மாநாட்டினை தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (01.08.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் "2வது சர்வதேச மீள் உருவாக்க மருத்துவ மாநாடு ReGen 2025" மாநாட்டினை தொடங்கி வைத்து, கையேடு வெளியிட்டு, விழா பேருரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:-

சர்வதேச மீள் உருவாக்க மருத்துவ மாநாடு

பல நோய்கள் மற்றும் விபத்து காயங்களினால் பாதிப்படைந்த திசுக்களை மீண்டும் உருவாக்கும் நவீன மருத்துவ சிகிச்சை முறைதான் மீள் உருவாக்க மருத்துவம் (Regenerative Medicine) ஆகும். இந்த புதிய சிகிச்சை முறையை பற்றி தெரிந்து கொள்ளும் வகையில், தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக, அகில இந்திய அளவில் அரசு மருத்துவமனை நடத்தும் முதல் சர்வதேச மீள் உருவாக்க மருத்துவ மாநாடு, கடந்த 03.08.2024 மற்றும் 04.08.2024 ஆகிய 2 நாட்கள் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதில் வலி மருத்துவ நிபுணர்கள், எலும்பியல் சிகிச்சை நிபுணர்கள், முடக்கு வாத நோய் நிபுணர்கள், விளையாட்டு மருத்துவ நிபுணர்கள், உடற்பயிற்சி நிபுணர்கள், மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் உட்பட 25 சிறப்பு மருத்துவ நிபுணர்கள், 300 மருத்துவர்கள் கலந்துகொண்டனர். அந்த வகையில் இன்று இரண்டாவது சர்வதேச மீள் உருவாக்க மாநாடு மயக்கவியல் மற்றும் வலிநிவாரண துறை சார்பாக சென்னை ஓமந்தூரார், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் நடைபெறுகிறது.

நோயாளிகளின் இரத்தம், எலும்பு மஜ்ஜை, கொழுப்பு போன்றவற்றிலிருந்து ஸ்டெம் செல்களை எடுத்து அவர்களுக்கு தேவையான பகுதிகளில் ஸ்கேன் கருவி உதவியுடன் ஊசி மூலமாக துல்லியமாக செலுத்தி திசுக்களை மீண்டும் உருவாக்கும் சிகிச்சை முறைகள் இந்த மாநாட்டில் அறுவை அரங்கிலிருந்து நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது.

துபாய், அமெரிக்கா, இத்தாலி போன்ற சர்வதேச நாடுகள் மற்றும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் உள்ள 30 சிறப்பு மருத்துவ நிபுணர்கள் மற்றும் 500 மருத்துவர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர். இந்த மீள் உருவாக்க மருத்துவ முறை மேலை நாடுகளில் மிக அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்த சிகிச்சை முறையினால் மூட்டு தேய்மானம், முடக்கு வாதம், எலும்பு முறிவுகள், சதை இழப்பு மற்றும் பலவிதமான விளையாட்டு காயங்கள் போன்றவற்றிற்கு மிகப்பெரிய பலன் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் இந்த சிகிச்சைமுறை புதிதாக தொடங்கப்பட்டு சுமார் 300க்கும் மேலான பொதுமக்கள் சிகிச்சைப் பெற்றுள்ளனர். இதனால் நாள்பட்ட வலிகளும், அறுவை சிகிச்சைகளும் தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முறையாக 2 இடங்களுடன் வலி நிவாரண பட்டப்படிப்பு (Pain medicine Fellowship in National Board) ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது தமிழ்நாட்டில் மேம்பட்ட சுகாதாரத்துறைக்கு ஒரு மைல்கல்லாகும். வலி நிவாரண மருத்துவப்பிரிவில் ஆண்டிற்கு சுமார் 3000த்திற்கும் மேற்பட்ட பல்வேறு நீண்ட நாள் வலிகள் மற்றும் புற்றுநோய் வலிகளினால் பாதிப்படைந்த நோயாளிகளுக்கு வலி நிவாரணம் அளிக்கப்படுகிறது.

இந்த சிகிச்சை முறைகள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் கட்டணமின்றி பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, மயக்கவியல் மற்றும் வலி நிவாரணத் துறை தலைவர் மரு.ஜி.கே.குமார் மற்றும் வெளிநாட்டிலிருந்து வருகை புரிந்துள்ள மருத்துவ பேராசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

---

நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்களை

# அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஆக.2

நுகர்வோர்கள் தங்களின் குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்களை சென்னை குடிநீர் வாரிய அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தின் ஊழியர் என்ற பெயரில் சில நபர்கள், தொலைபேசி வாயிலாக நுகர்வோர்களை அணுகி குடிநீர் / கழிவுநீர் வரி மற்றும் கட்டண நிலுவைத் தொகையை அவர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணுக்கு Gpay, Phonepe, Paytm, போன்ற UPI செயலிகள் மூலம் செலுத்துமாறு கேட்பதாகவும் தவறும் பட்சத்தில் குடிநீர் / கழிவுநீர் இணைப்பு துண்டிக்கப்படும் எனக் கூறி பணம் பறிப்பதாக புகார்கள் வாரியத்திற்கு வருகின்றன.

நுகர்வோர்கள் நிலுவைத் தொகையை செலுத்தும் போது எச்சரிக்கையாக இருக்குமாறும் தனிப்பட்ட மொபைல் எண்ணுக்கு நிலுவைத் தொகை செலுத்தக் கூறி, அங்கீகரிக்கப்படாத நபர்களிமிருந்து வரும் அழைப்புகளை நிராகரிக்குமாறும் சென்னை குடிநீர் வாரியம் கேட்டுக்கொள்கிறது. கீழே குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டண முறைகள் வாயிலாக மட்டுமே வாரியத்திற்கு நிலுவைத் தொகையை செலுத்துமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள்.

சென்னை குடிநீர் வாரிய இணையதளமான www.cmwssb.tn.gov.in அல்லது நேரடி நிலுவைத் தொகை செலுத்தும் இணைப்பான https://bnc.chennaimetrowater.in/#/public/cuslogin ஆகிய இணைப்புகளின் வாயிலாக செலுத்தலாம்.

Gpay, Phonepe, Paytm, போன்ற UPI செயலிகளில் உள்ள பயன்பாட்டு பில் செலுத்தும் வகையின் (Utilities Category under Bill payments option) கீழ் CMWSSB தேர்ந்தெடுப்பதன் மூலம் உங்கள் பில் எண் & மொபைல் எண்ணை உள்ளிட்டு பணம் செலுத்தலாம்.

காசோலை / வரைவோலை / டெமிட் கார்டு / கிரெடிட் கார்டு மூலம் 15 பகுதி அலுவலங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள வசூல் மையங்கள் வாயிலாக செலுத்தலாம். வசூல் மையங்களில் உள்ள BBPS QR குறியீடுகளை ஸ்கேன் செய்வதன் மூலம் செலுத்தலாம்.

சென்னை குடிநீர் வாரிய பணிமனை மேலாளர்கள் கொண்டு வரும் iPoS இயந்திரங்கள் மூலம் செலுத்தலாம்.

மேலும், மோசடி செயல்களில் ஈடுபடுவோரிடம் நுகர்வோர்கள் தங்களது பணத்தை இழக்கும் தருவாயில் வாரியம் எவ்விதத்திலும் பொறுப்பேற்காது என தெரிவித்துக் கொள்கிறது.

எனவே, நுகர்வோர்கள் தங்களது நிலுவைத் தொகையை செலுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் 044-4567 4567 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளுமாறு வாரியம் கேட்டுக்கொள்கிறது.

---

# தி.மு.க. இலக்கிய அணி

## சென்னை வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சி.மணிகண்டன் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால் அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **தீரு. ஒலிஒளி ஆ.பாபு** (1/1, மேற்கு கிருஷ்ணப்பா கிராமணி தோட்டம் 1வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை600021) அவர்கள் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-08-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

---

திருக்குறள் முற்றோதிய

# 122 மாணவர்களுக்கு தலா ரூ.15 ஆயிரம் பரிசுத் தொகை - சான்றிதழ்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்குகிறார்!

சென்னை, ஆக. 2- உலக நாகரிகத்திற்குத் தமிழினத்தின் பங்களிப்புகள் பல. அவற்றுள் இரண்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஒன்று தமிழிசை, மற்றொன்று திருக்குறள். தமிழில் மிகச் சில சொற்களில் ஆன கவிதை வடிவம் குறள் வெண்பா ஆகும். மிக விரிந்த உலகச் சிந்தனைகளை மிகக் குறுகிய வடிவத்தில் தரமுடியும் என்பதை உலக இலக்கிய அரங்கில் முதலில் திருவள்ளுவரே செய்து காட்டினார் எனலாம். திருவள்ளுவர் மழலையின் சிரிப்பு முதல் மெய்யுணர்தல் வரை மனிதனுக்குச் சிந்தனைகளை அளவிற்சிறிய தம் குறளில் வழங்கியுள்ளார்.

மாணவச் செல்வங்களிடையே திருக்குறள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குறள் பரிசுத் திட்டம் கடந்த 2000-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்த 70 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.10,000/- குறள் பரிசுத் தொகையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வந்தன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அடியொற்றி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 2022-ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்ற உச்ச வரம்பு நீக்கப்பட்டு குறள் ஒப்பித்தல் செய்யும் அனைத்து மாணவர்களுக்கும் குறள் பரிசுத்தொகை தலா ரூ.10,000/- வீதம் வழங்க ஆணையிடப்பட்டது. அவ்வகையில் 2022-ஆம் ஆண்டு 219 மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டது.

மாணவர்களுக்குத் திருக்குறள் மீதான ஆர்வத்தை மேலும் கூட்டிடும் வகையில் திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களையும் ஒப்பிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத்தொகையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 2022-2023-ஆம் ஆண்டு முதல் ரூ.10,000/-த்திலிருந்து ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்தகைய திருக்குறளின் சிறப்புகள் ஏட்டளவில் நின்றுவிடாமல் மாணவர்கள் மட்டுமல்லாது பொது மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கேதுவாக திருக்குறளை மையமாகக் கொண்டு செல்வி வர்சா ராஜ்குமார் குழுவினரின் சங்கத்த மிழ் நாட்டிய நாடகம், தஞ்சை ஆடு துறை பாஸ்கர் குழுவினரின் திருக்குறள் நாடகம், கலைமாமணி பாரதி திருமகன் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சியும், கலைநன்மணி கருங்குயில் கணேஷ் குழுவினரின் கிராமியக் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பெறவுள்ளன.

ஈரடியால் உலகளந்து வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகையின் வளத்தக்க சிந்தனைகளை வாழ்வியல் சூழலோடு இணைத்து வளர்த்தெடுக்கும் முயற்சியில் ஓர் அற்புதத் திருவிழாவாக இந்நிகழ்ச்சி 04.08.2025 (திங்கள்கிழமை) அன்று காலை 9.00 மணிக்கு சென்னை, அடையாறு திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் அரங்கம் முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் திருக்குறள் முற்றோதல் மாணவர்களுக்கான இணையவழி விண்ணப்பப் பக்கத்தை திறந்துவைத்து விழாப்பேருரை ஆற்றவுள்ளார். தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. இராஜாராமன், இ.ஆ.ப., முன்னிலையுரையும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் ஔவை அருள் வரவேற்புரையும் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி கு.ப. சத்தியபிரியா நன்றியுரையும் ஆற்றவுள்ளனர்.

ஏழிசையும் பல்கலையும் கலந்து மணக்கும் இத்தமிழ்க் கலை விழாவில் பொற்குடத்திற்குப் பொட்டு வைத்தாற்போல தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால், திருக்குறள் முற்றோதலில் வெற்றி பெற்ற சென்னை (2), திருவள்ளூர் (9), காஞ்சிபுரம் (1), வேலூர் (1), கிருஷ்ணகிரி (1), திருவண்ணாமலை (2), விழுப்புரம் (3), கடலூர் (9), அரியலூர் (2), சேலம் (5), நாமக்கல் (2), ஈரோடு (2), கரூர் (1), கோயம்புத்தூர் (2), திருப்பூர் (1), நீலகிரி (1), திருச்சிராப்பள்ளி (4), சிவகங்கை (8), தஞ்சாவூர் (6), திருவாரூர் (2), நாகப்பட்டினம் (8), இராமநாதபுரம் (4), மதுரை (1), திண்டுக்கல் (1), தேனி (3), விருதுநகர் (12), திருநெல்வேலி (2), தூத்துக்குடி (1), கன்னியாகுமரி (6), செங்கற்பட்டு (15), இராணிப்பேட்டை (1), தென்காசி (3), மயிலாடுதுறை (1), ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 122 பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத்தொகையாக ரூ.15,000/-க்கான காசோலையும், சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. செம்மொழித் தமிழ் மீதும் உலகப் பொது முறையான திருக்குறள் மீதும் தீராப்பற்று கொண்ட மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையிலும், அய்யன் திருவள்ளுவரின் பெருமையைப் பறைசாற்றும் வகையிலும் இந்நிகழ்ச்சிகள் அமையவுள்ளன.

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், ஈக்காடு ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முகாமை தொடங்கி வைத்து விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக சான்றிதழ்களையும், பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், வழங்கி பார்வையிட்டார். உடன் ஒன்றியச் செயலாளர்கள். டி.முரளிகிருஷ்ணன் . ஆர்.ஜெயசீலன், துணை ஆட்சியர் பாலமுருகன் , வட்டாட்சியர் பரமசிவம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்வகுமார், மெல்கி ராஜாஙசிங், மேலாளர் ஸ்ரீராம் காந்தி , ஒன்றிய நிர்வாகிகள் டி.தென்னவன், மனோகரன், மதுரை வீரன், பிராங்கிளின், எஸ். வேலு, கே.முகமது ரஃபி, பி.கே.இ.கபிலன், ஒதிக்காடு பாலாஜி, சந்தோஷ், ரூபன், நாகராஜ், அஜித்குமார், யுவராணி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்! முதல்வர் துவக்கி வைக்கிறார்!

# 124 'அ' வட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, ஆக.2

124 'அ' வட்டக் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு 'நலம் காக்கும் ஸ்டாலின்' பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் இன்று (2.08.2025 சனிக்கிழமை), காலை 9.00 மணியளவில் புனித பீட்ஸ் ஆங்கிலோ இண்டியன் மேல் நிலைப்பள்ளி சாந்தோம் நெடுஞ்சாலை, சாந்தோம். சென்னை-4-ல் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை துவக்கி வைக்க வருகை தரும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.